# போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...


வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆடி 24 | வீச்சு 50

7-8-48 சனிக்கிழமை


ஆசிரியர்கள்:



முதல் சர்வாதிகாரி

# ஒளி படைத்த கண்ணினாய், போ! போ! போ!

ஒளி படைத்த கண்ணினாய், போ போ போ
உறுதி கொண்ட நெஞ்சினாய், போ போ போ
களி படைத்த மொழியினாய், போ போ போ
கடுமை கொண்ட தோளினாய், போ போ போ
தெளிவு பெற்ற மதியினாய், போ போ போ
சிறுமை கண்டு பொங்குவாய், போ போ போ
எளிமை கண்டு இரங்குவாய், போ போ போ
ஏறுபோல் நடையினாய், போ போ போ
பொய்மை கூறல் அஞ்சுவாய், போ போ போ
பொய்மை நூல்கள் எற்றுவாய், போ போ போ
நொய்மை யற்ற சிந்தையாய், போ போ போ
நோய்களற்ற உடலினாய், போ போ போ

## ஆனால்

வலிமை யற்ற தோளினாய் வா வா வா
மார்பிலே ஒடுங்கினாய் வா வா வா
பொலிவிலா முகத்தினாய் வா வா வா
பொறி இழந்த விழியினாய் வா வா வா
ஒலியிழந்த குரலினாய் வா வா வா
ஒளியிழந்த மேனியாய் வா வா வா
கிலிபிடித்த நெஞ்சினாய் வா வா வா
கீழ்மை என்றும் வேண்டுவாய் வா வா வா
சென்றபோன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தைகொண்டு போற்றுவாய் வா வா வா
வென்று நிற்கும் மெய்யெலாம் பொய்யாக
விழி மயங்கி நோக்குவாய் வா வா வா

"ஒழுக்கமே உருவான ஓமந்தூரார்" தலைமையில் கூடிநிற்கும் சென்னை ஆளவந்தார்கள் சென்ற இரண்டாண்டுகளாக அடுத்தடுத்து பிறப்பித்துவரும் அதி அற்புதமான அவசரத் தாக்கீதுகளின் பட்டி, இந்தப் பாட்டு!

"ஒளி படைத்த கண்களா? அவற்றின் பார்வை எங்கள் மீது படக்கூடாது! தூர விலகி இருக்கட்டும் தூய்மை செறிந்த அக்கண்கள்!' என்கின்றனர் நம் ஆளவந்தார்கள் ஒரு கணம்! மறுகணம், உறுதி கொண்ட நெஞ்சினர்—உண்மையை ஊராள்வோரின் கூர்வாளுக்குச் சிறிதும் அஞ்சாமல் எடுத்துக் காட்டும் உள்ள உரம் படைத்தவர் எவரேனும் எதிர்ப்பட்டால் சீறி விழுகின்றனர் அவர்கள் மீது சீற்றம் மிகக்கொண்டு! சிறுமை கண்டு பொங்கி எழும் சீரிய மதி படைத்தோரும், எளிமை கண்டு இரக்கங் கொள்ளும் இளகிய நெஞ்சுடையோரும், தெளிவு பெற்ற தூய்மை படைத்த தீர மனம் கொண்டவர்களும் அரசாளும் பெருமக்களைக் கண்டு, "ஆகாத திட்டங்களை எல்லாம் ஆத்திரம் கொண்ட மக்கள் மீது திணிக்கின்றீர்களே, விளைவு என்னாகும் என்று எண்ணிப் பார்த்தீரோ" என்று கேட்டால், "உமக்கென்ன அதுபற்றி? போம் உம் வழியே உம் வேலை பார்த்துக்கொண்டு" என்று உருட்டி மிரட்டிப் பேசுகின்றனர். அவர்கள் ஏறுபோல் நடையினரைக் கண்டால் தூற்றுகின்றனர். பொய்மை கூற அஞ்சுவாரைக் கண்டால் ஏசல் மொழி வீசுகின்றனர். பொய்யை புளுகை—புராணத்தை பொசுக்குவோம் என்றுரைக்கும் சீர்திருத்த உள்ளங்களைக்கண்டால் சற்றே விலகி இரும் பிள்ளைகாள் என்று கூறிவிடுகின்றனர். நொய்மையற்ற சிந்தையாரைக் கண்டால் நொந்து கொள்கின்றனர். நோய்களற்ற உடலினரைக் கண்டால் போம் போம் போம் என்று துரத்துகின்றனர். ஆனால் அதே நேரத்தில் வலிமையற்ற தோள்கள், சுருண்டு கிடக்கும் மார்புகள், பொலிவிழந்த முகங்கள், ஒளி இழந்த கண்கள், கிலிபிடித்த நெஞ்சங்கள், கூனிக் குறுகிக் கிடக்கும் உடலங்கள் ஆகியவற்றை வருக வருக எனவாழ்த்தி வரவேற்கின்றனர். நீதியே வெளியேறு! நேர்மையே, வெளியேறு! நியாயமே, வெளியேறு! உண்மையே, வெளியேறு! சுதந்தரமே வெளியேறு! என்று வெளியேற்றுப் படலம் வாசித்துவிட்டு, வாசித்த அதே மூச்சில் அடக்கு முறையே வா வா! 144 ஏ வா வா! ஜாமீன் பறிமுதலே வா வா! கிரிமினல் திருத்தச் சட்டமே வா வா! பொது மக்கள் பாதுகாப்புச் சட்டமே வா வா! தடியடி தர்பாரே, துப்பாக்கி வேட்டே, தடை உத்தரவுகளே வாரீர் வாரீர் என்று 'வருக' கீதம் பாடுகின்றனர். ஒளியைக் கண்டால் கூசுகின்றனர், இருளைக் கண்டால் களிக்கின்றனர், உண்மையைக் கண்டால் ஒதுங்குகின்றனர்! பொய்ம்மையைக் கண்டால் புன்முறுவலுடன் முன்வருகின்றனர். உரிமை வேட்கை அவர்கட்கு வேம்பெனக் கைக்கின்றது. அடிமை வாழ்வு அவர்கட்குத் தேனென இனிக்கிறது. புரட்சிக் கருத்துகள் அவர்கட்கு எட்டியெனக் கசக்கின்றன—ஆனால் பத்தாம் பசலித் தத்துவங்கள் கட்டிக் கரும்பெனச் சுவைக்கின்றன. தென்றலா அது நச்சுக் காற்றல்லவோ என்கின்றனர். வாடையா அதுதான் எமக்கு இன்பம் என்கின்றனர். பூஞ்சோலையா—அது தீது என்கின்றனர் பாலைநிலமா. அதுதான் வேண்டும் என்கின்றனர். நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தரக்கூடியதை எல்லாம் வெறுத்து ஒதுக்குவதும் மக்களை முன்னேற்றப் பாதையில் செல்ல ஒட்டாது தடுக்கும் முட்டுக்

(11-ம் பக்கம் பார்க்க)

# அந்த நாளும் வந்தது!

"தலைவரே, ஆணையிடுங்கள்!"

"எங்கள் தலைவரே, தயவுசெய்து ஆணையிடுங்கள்."

"ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆளடிமைகள் என ஆரியர்க்கு அடங்கி வாழ்ந்த் எங்களைத் தட்டி எழுப்பி, தன்மான உணர்ச்சியூட்டி, புது வாழ்வு வாழச் செய்த புத்துலகச் சிற்பியே, ஆணையிடுங்கள்"

"தலைவரே, எங்கள் உள்ளத்தை உணர்ச்சியூற்றாக்கிவிட்ட உத்தமரே, பழமையின் தொட்டிலாய்க் கிடந்த தமிழகத்தில் மகத்தானதோர் புரட்சிப் புயலை எழுப்பிவிட்ட மாவீரரே, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம், எங்களைப் போர்க்களம் நோக்கிப் போக உத்தரவு கொடுங்கள்! தயவு செய்து உத்தரவு கொடுங்கள்! இன்றைக்கே தங்கள் தாக்கீதைப் பிறப்பித்து விடுங்கள்! இப்பொழுதே தங்கள் கட்டளையைத் தந்து விடுங்கள்! இந்த வினாடியிலேயே போர் தொடங்கி விடுங்கள்! இதோ இப்பொழுதே நாங்கள் களம் புகத் தயாராய் இருக்கிறோம். போர் தொடங்கி விடுங்கள்! போர் தொடங்கி விடுங்கள்!"

"தமிழகத்தைத் திருத்திய தீரரே, உயர் எண்ணங்கள் மலரும் சோலையே, வஞ்சநெஞ்சுடைய அந்த வட ஆரியர்தம் கூற்றமே, உங்கட்கு மனம் இரங்கவில்லையா? எங்கள் உள்ளம் போர் போர் அறப்போர் என்று துடிப்பதைக் கண்டும் எங்களை, "செருமுகம் நோக்கிச் செல்க" எனச் செலுத்த தங்கட்கு விருப்பமில்லையா? ஆரியர் சூழ்ச்சியும் ஆணவமும் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டும் இறுமாப்பும் நாளுக்கு நாள் ஒன்று பத்து நூறாகப் பெருகுவதை நீங்கள் காணவில்லையா, கண்டுங்கூட எங்கட்கு நீங்கள் போர்க்களத் திசைமுகம் காட்டவில்லையெனில் எங்கள் வீரத்தில் தங்கட்கு நம்பிக்கையில்லை என்று பொருளா? அப்படியும் சொல்வதற்கில்லையே! மானமொன்றே நல் வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த நம் தமிழ்வேந்தர் பூனைகள் அல்லர் அவர் வழிவந்த நீவிர் புலிநிகர் தமிழ் மாந்தர் என்று நீங்கள்தானே அன்றோர் நாள் எங்களைப் பாராட்டினீர்கள்! பிறகு ஏன் எங்களை போர்க்களம் அனுப்பத் தயங்குகிறீர்கள்? எங்கள் மார்பு, பகைவர் விடுக்கும் அம்புகளை ஏற்கும் ஆற்றல் படைத்ததில்லை என்று கருதுகிறீர்களா? அல்லது எங்கள் தோள் பகைவர் வாளினும் வன்மை மிக்கது என்பதில் தங்கட்கு ஏதேனும் ஐயமா? எங்கள் கரங்கள் வீரத்தை வார்த்தெடுத்த எஃகு உருவ வார்ப்படங்கள் அல்லவா? அஞ்சாமை எனும் பண்பு விளக்கங்கள்தானே எங்கள் நரம்புகள், தோல்! எங்கள் உடலிலே ஓடும் குருதி சிறிதும் பழுதற்ற செந்தமிழே அல்லவா? ஏன் இவ்வளவும் தெரிந்திருந்தும் போர் தொடுக்க மறுக்கிறீர்கள்? தலைவரே, பகுத்தறிவியக்கத் தந்தையே, திராவிடத் திருநாட்டுத் தளபதியே, பொறுக்க முடியாது இனி எங்களால்! போர் தொடுத்தே தீர வேண்டும் தாங்கள்!"

"உறங்கிக் கிடந்த எங்கள் உள்ளத்திற்கு எழுச்சி தந்தீர்கள், பழமையின் பிடியிலே கட்டுண்டு கிடந்த எங்களை புதுமையின் பாதை வழி செலுத்தினீர்கள், பரம்பரை பரம்பரையாக வர்ணாசிரமம் எனும் முள்வேலிக்குள் முடக்கப்பட்டிருந்த எங்கள் சமுதாயத்தை, அந்த முள்வேலியை மடமடவென முறித்துத் தள்ளிவிட்டு, தைரியமாக வெளியேறி, வெளியே காற்றோட்டமுள்ள சூழ்நிலையில் அமைந்துள்ள பகுத்தறிவுப் பூங்காவில், விடுதலைத் தென்றலை நுகர்ந்தவண்ணம், உலவிடும் வீரர் கூட்டமாக மாற்றியமைத்து மறுகோலம் செய்துவிட்டீர்கள், சிந்திப்பதே பாவம், ஆராய்வதே தவறு, எண்ணிப் பார்ப்பதே போராபத்து, சந்தேகிப்பதே நாஸ்திகம், நம்பிக்கையே நமக்கினிய கீதம் என்றெண்ணிக் கிடந்த செந்தமிழர் கூட்டத்தை சிந்தனைச் சிற்பிகளாகவே ஆக்கிவிட்டீர்கள், முற்றுப் புள்ளிகள் இருந்த இடத்திலெல்லாம் ஒவ்வொரு கேள்விக் குறியை நடமாட விட்டு விட்டீர்கள், சடங்கு சம்பிரதாயம் எனும் கோட்டை கொத்தளங்களை இடித்துத் தகர்த்தெறிந்து விட்டீர்கள், அவை, மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் அமைத்துக் கொண்டு மாயா ஜாலங்களைப் புரிந்து கொண்டிருந்த இடத்திலெல்லாம் சுயமரியாதைச் சங்கம் எனும் ஆபரேஷன் தியேட்டர்களை அமைத்துவிட்டீர்கள். அங்கெல்லாம் நாளும் நாளும் சமுதாயத்தின் உடலைக் கீறி எடுத்து உள்ளிருக்கும் புண்ணை ஆழத்தோண்டி அறுத்தெடுத்து ஆற்றித் தீர்க்கும் 'அறுவை மருத்துவம்' நடக்கச் செய்துவிட்டீர்கள், வைதீக நோயினால் தாக்குண்டு, இதிகாச ஜன்னியினால் பீடிக்கப்பட்டு, நலிந்து மெலிந்து நல்வாழ்வு அற்றுக்

கிடந்தவர்க்கெல்லாம் சுயமரியாதை இஞ்செக்ஷனும் பகுத்தறிவு சூரணமும் திராவிட இரசாயன மருந்தும் கொடுத்துக் கொடுத்து அவர்களை எத்தகைய போராட்டத்திற்கும் தயாராக இருக்கக்கூடிய துள்ளு காளைகளாக மாற்றி விட்டீர்கள், இன்றோ போர் போர் என அவர்கள் துடிக்கின்றார்கள், நீங்களோ பொறுங்கள் பொறுங்கள் எனக் கூறுகிறீர்கள், எத்தனை நாளைக்கு நாங்கள் பொறுப்பது, எப்படித்தான் ஆரிய ஆணவக்காரர்களின் சேட்டைகளைப் பொறுத்துக்கொண்டிருப்பது, தலைவரே, ஒன்று இரண்டா அவர்கள் தரும் தொல்லை, உண்டோ அதற்கு ஓரளவேனும் எல்லை, பொறுப்பது என்பது இனிச் சிறிதும் இல்லை, தயவு செய்து தந்திடுங்கள் போர் தொடுத்தேன் என்ற சொல்லை!''

''பெரியார் அவர்களே, இவ்வளவு கூறியும் இனியும் பொறுங்கள் என்று ஆணை தருகிறீர்களே, எப்படி நாங்கள் பொறுப்பது? ஒரு வார்த்தை கூறுங்கள், ஒரே ஒரு வார்த்தை கூறுங்கள், போர் தொடுத்து விட்டேன் ஆகவே இனி களம் செல்லுங்கள் காளைகளே என்று கூறுங்கள், அந்த ஆணையை மட்டும் தந்துவிடுங்கள், அதை நீங்கள்தான் தரவேண்டும், அதைத் தருவதற்கு உங்களால்தான் முடியும், நீங்கள் தந்தால்தான் ஆணை, ஆணையாகும், இல்லையேல் ஆணை என்பதற்குப் பொருளேது, நீங்கள்தானே எங்கள் உள்ளம் கவர் கள்வர், ஆகவே உங்களை வணங்கி வணங்கிக் கேட்கிறோம், ஆணை பிறப்பித்துவிடுங்கள்.''

''அன்றோர் நாள், மருங்கூரில் தங்கள் பேச்சுக்குத் தடை என்றார்கள், உடனே எங்கள் தோள் தினவெடுத்தது, எங்கள் குருதி கொதித்தது, எங்கள் நரம்பு புடை புடைத்தது. எங்கள் நெஞ்சு துடிதுடித்தது, எங்கள் கண்கள் கனல் கக்கின, போர் முரசு கொட்டவேண்டும்—களம் நோக்கிச் செல்லவேண்டும்—பகைவர் திறத்தினை முறிக்கவேண்டும் என்றெல்லாம் எங்கள் உள்ளம் கொக்கரித்தது. ஆனால் நீங்களோ துடிதுடிக்கும் உள்ளங்களே, கொஞ்சம் துடுக்கடங்கிக் கிடவுங்கள் என்று கூறிவிட்டீர்கள்!

மறுபடியும் ஓர்நாள் **கருஞ் சட்டைப் படைக்குத்** தடை என்று கூறினார்கள், எங்கள் கண்ணின்மணி அன்ன கருப்புச் சட்டைக்கோ தடை என்று கொதித்தெழுந்தோம் நாங்கள், ஆனால் அப்போதும் நீங்கள் பொறுமையைப் போற்றுமின் பொச்சரிப்புக் காட்டன்மின் என்றே கூறிவிட்டீர்கள்.

முன்னர் ஓர்நாள், பகுத்தறிவுப் போராட்டத்தைச் சித்தரித்துக் காட்டும் **போர்வாள்** நாடகத்திற்கு 144 என்றது சென்னை சர்க்கார், பொறுக்கவில்லை அச்சேதி கேட்டு எங்கள் உள்ளம், என்றாலும் தங்கள் ஆணை பொறுமை அணிகலனை எங்கள் தோளுக்குப் பூட்டிவிட்டது.

மற்றோர் நாள், ''முன்னர் இருந்தார் சில கம்பர்! விட்டதாலே முளைத்தெழுந்த கம்பக்களைகள் மும்மடங்கோ?'' எனச் சீறியெழுந்து, புலவர் குழந்தை அவர்கள் பாடிய, **இராவண காவியம்** எனும் இணையற்ற இலக்கியத்துக்குத் தடை விதித்தார்கள் அறிவை ஆரிய வட்டாரத்துக்கு அடகு வைத்துவிட்ட ஆளவந்தார்கள் என்றொரு கொடுஞ் சேதி எம் செவிகளை வந்து தாக்கிற்று, அதற்கும் நாங்கள் பொறுத்துக் கொண்டோம், தங்கள் கட்டளை பொறுமையை வலியுறுத்திய காரணத்தால்!

வேறோர் நாள், புரட்சிக் கவிஞரின் **சஞ்சீவி பர்வதத்தின் சாரலி**லிருந்து ஓர் பகுதியை எடுத்துக் காட்டி, அத்தேனை, தினைமாவை, அள்ளும் சுவைக் கரும்பை எட்டியென உரைத்தார் எட்டியினைக் கரும்பாகக் காணும் பண்புடைய கனம் அவினாசியார், உரைத்தாரா, இல்லை, உயர்நிலைப்பள்ளிகள் அத்தனைக்கும் இவை அனைய பாடல்களைப் பிள்ளைகட்குப் பாடமாகப் புகட்டாதீர் என்று தாக்கீது பிறப்பித்தார், அந்தோ பரிதாபம் என அவர் நிலைக்கு இரங்கி அனுதாபம் காட்டினோமே தவிர அவருடன் மல்லுக்கு நிற்க நாங்கள் முனைந்தோமில்லை, தங்கள் ஆணை பொறுமின் பொறுமின் என உரை தந்துவிட்டதால்!

இன்னோர் நாள், எங்கள் எழுச்சி முரசு ''**விடுதலை**''க்கு ரூ 2000 ஜாமீன் என்ற விலங்கு இடப்பட்டது. அந்த விலங்கை மட்டும் ரூ 15,000 நன்கொடை எனும் சம்மட்டி கொண்டு உடைத்தெறிந்தோம் சுக்கு நூறாக, ஆனால் விலங்கிட்டாரின் விபரீத செயலுக்கும் போர்க்கள அழைப்பையே பரிசாகத்தர எண்ணினோம் நாங்கள், ஆனால் தாங்கள் அதை ஒப்பவில்லை, ஆகவே பெட்டிப் பாம்பென அடங்கி விட்டோம்.

ஆனால் இன்றோ போன ஹிந்தி வருகிறது பூமணத்தோடே! இதை எப்படி நாங்கள் பொறுக்க முடியும்? இதுநாள்வரை, ஆரியர் ஏவலுக்குஅஞ்சிய ஆளவந்தார்கள் நமக்குத்தேடிய கேடுகள் அத்தனையும் ஆத்திரத்தையும் ஆவேச உணர்ச்சியையும் எங்கள் உள்ளத்தில் மூட்டிவிட்டன என்றாலும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருந்தோம் தங்கள் தாக்கீது அதுவெனக் கண்டு! ஆனால் இந்நாள், நம் தமிழை அழிக்க வரும் இந்தியைக் கண்டு, ஆரிய மொழியின் அந்த 'ஸ்வீகாரப் புத்திரி'க்கு செந்தமிழகத்திலே சிங்காதனம் அமைக்கப்படடு செங்கோலும் தரப்படுகின்ற அக்கிரமத்தைக் கண்டு நாங்கள் சும்மா இருக்க முடியாது! தலைவரே! நீங்கள் போர் தொடுத்துத்தான் ஆகவேண்டும்! இம்முறை நிச்சயம் போர் தொடுத்துத்தான் ஆகவேண்டும். பொறுங்கள் என்றீர்கள் பலமுறை, பொறுத்துக் கொண்டிருந்தோம், சும்மா இருங்கள் என்றீர்கள் எத்தனையோ முறை, சும்மா இருந்தோம், ஆத்திரம் வேண்டாம் அடங்குக என்று ஆணையிட்டீர்கள் எண்ணற்ற முறை, அடங்கியிருந்தோம், ஆனால் இம்முறை, நம் தாய்மொழிக்கே கேடு சூழப்படும் இம்முறை, பத்தாண்டுகளுக்கு முன்னமே, தாளமுத்து நடராசன் என்னும் இரு காளைகளின் குருதி குடித்தும் கூட, தன் இரத்தப்பசி தீராத காரணத்தால் மீண்டும் தமிழகத்தில், இந்தி தன் தலைநீட்ட முனைந்திருக்கும் இம்முறை நாங்கள் பொறுக்க மாட்டோம், பொறுக்க மாட்டோம், பொறுக்க மாட்டோம்! தலைவரே, போர் உண்டு என்று மட்டும் சொல்லி விடுங்கள், களம் உள்ள இடத்தை மட்டும் காட்டி விடுங்கள், மற்ற பணி அத்தனையையும் நாங்களே ஆற்றிவிடுகிறோம், வெற்றித்திருவினை தங்கள் காலடியில் கொண்டு சேர்த்து விடுகிறோம், பெரியாரின் பெரும் படையினர் நாங்கள்

என்ற பெயருக்குச் சிறிதும் மாசுவராது பார்த்துக் கொள்ளுகிறோம், ஒரு சில விநாடிகளில் தொடுத்த பணி முடித்து விட்டுத் திரும்பி விடுகிறோம் வெற்றிச் சங்கு ஊதியவண்ணம்."

"தலைவரே ஆணை தாருங்கள்! எங்கள் தலைவரே ஆணை தாருங்கள்!"

"ஒப்பற்ற தமிழர் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவரே, ஆணை தாருங்கள்—ஆணை தாருங்கள்! இன்றே தாருங்கள்—இப்போதே தாருங்கள்! தாருங்கள் தாருங்கள், அவசியம் தாருங்கள்"

சிதறிக் கிடந்த தன்னை, ஒன்று சேர்த்து உருவாக்கி, உரமூட்டி, உறுதியின் உறைவிடமாக, உற்சாகத்தின் ஊற்றாக, உணர்ச்சியின் நிலைக்களமாக, அஞ்சாமையின் சின்னமாக துங்கம் மிகு செந்தமிழின் தூய விளைவாக, வீர மறவர்தம் அணிவகுப்பு இது என எவரும் உரைக்கத்தக்க ஆற்றல் படைத்த அடலேறுகளின் கூட்டமாக ஆக்கிவைத்த அந்த புரட்சித் தலைவர் பெரியாரை நோக்கி, தமிழர் பட்டாளம், கேட்டது இது போல! ஒரு முறை கேட்டது, இரு முறை கேட்டது, மறுபடியும் மறுபடியும் வேண்டியது, மீண்டும் மீண்டும் குறையிரந்தது, திரும்பத் திரும்ப "ஆணையிடுங்கள் ஆணையிடுங்கள்" என்று "நச்சரித்தது", ஆனால் தலைவர் பெரியாரோ, இதென்ன துடிப்பு, ஏன் இந்தக் கொதிப்பு, பொறுத்திருங்கள் சில நாள், போராட்டத்திற்கான தக்க சூழ்நிலை வரட்டும், இப்போதென்ன அவசரம் என்று கூறிவிட்டார். போர் போர் என்று படைவீரர்கள் ஆர்ப்பரித்தபோதெல்லாம் பொறு பொறு என்பதையே மாற்றமாகத் தந்துவந்தார். களம் களம் என்று காளைகள் துடிதுடித்தபோதெல்லாம் இரும் இரும் என்பதையே அவர் விடையாகக் கூறிவந்தார். வந்த சண்டையை விடுவதா என்று சேனைவீரர்கள் 'சீறியெழுந்த' போதெல்லாம், வீண் சண்டைக்குப் போவதா என்று அவர்களைத் தடுத்து நிறுத்திவந்தார். ஆளவந்தார்கள் தமிழர்களின் காலை வலிய மிதித்து வம்புச் சண்டைக்கு இழுத்தனர் பலமுறை, ஆனால் அத்தனை முறையும் பெரியார் அவர்கள் போராட்ட உத்தரவை ஒத்திப்போட்டுக்கொண்டே வந்தாரே தவிர போர் தொடங்கிவிட்டேன் என்று கூறிட முனைந்தாரில்லை. வீரர்கள் சலித்தனர், போர் இல்லையே, பொழுது வீணாகிறதே, காலம் கழிகிறதே என்று "குறை" கூறினர், போர் தொடங்கிடும் அந்த நாளும் வந்திடாதோ என்று சோகம் நிறைந்த குரலிலே கீதம் இசைக்கத் தொடங்கினர்! ஆனால் பெரியார், படைவீரர்களினும் பார்க்க போர்த் துடிதுடிப்பும் ஆர்வமும் மிகக் கொண்ட பெரியார், போர்வீரர்கள் நாளை தொடங்குவோம் போர் என்று சொன்னால் இல்லை இன்றே தொடங்குவோம் என்று கூறத்தக்க அளவு வீரம் விம்மிதமுடன் விளையாடும் உள்ளம்தனைப் படைத்த பெரியார், போர் வீரர்களை சற்றே அடங்கி இருங்கள் தோழர்காள் என்று சொல்லி அடக்கி வந்தார்.

"ஆளவந்தார்கள் அறப்போருக்கு அறைகூவி அழைக்கும்போது நாம் வறிதே கிடப்பதா"—இது படைவீரர்களின் கொந்தளிப்புக்குக் காரணமான அடிப்படைக் கருத்து.

"கூடாதுதான். ஆனால் வலது கரத்தை இடது கரம் அடிப்பதா? நம் கண்ணை நம் விரல்கொண்டே குத்திக்கொள்வதா? நம்மவர்களே ஆளவந்தார்களாய் இருக்கிறார்களே, போர் தொடங்கினால் துயருற வேண்டியவர்கள் நம் இனத்திலே உதித்த நம்மவர்களே ஆன இவர்கள்தானே! ஓமந்தூர் ராமசாமி ஒரு புறத்துப் படைவரிசையிலும் ஈரோட்டு ராமசாமி எதிர்ப்புறத்துப் படை வரிசையிலும் இருப்பதா, இத்தகு நிலையினை ஏற்படுத்துவது நலமா"—இது பெரியாரின் உள்ளம்.

"நம்மவர்கள்தான்! அதற்காக.........? நம் உடலிலேயே பிறந்து வளர்வதுதான் வியாதி என்பதற்காக அதை மருந்து கொடுத்துக் கொன்றிடாது இருக்க முடியுமோ? நம் கழனியிலேயே தோன்றி வளர்ந்துள்ளது களை என்பதற்காக அதனை எடுத்து எறியாமல் இருப்பது ஆகுமோ"—படைவீரர்களின் மனம்போன விதம்!

"ஆகாதுதான். பயிர் செழித்து வளர வேண்டுமானால் 'களை பறி' செய்யவேண்டியது மிக மிக முக்கியமானதுதான், களைகளையும் வளரவிட்டுவிட்டு பயிர்களையும் 'பச்'சென்று இருக்கும்படி பார்த்துக் கொள்வது இயலாதுதான்.. ஆனாலும நம்மவர்களாய் இருக்கிறார்களே, இவர்களுடனா நாம் போர் தொடுப்பது"—பெரியார் அவர்களின் ஆழ்ந்த சிந்தனையின் விளைவான தயக்கம்!

"போர் தொடுக்கத்தான் வேண்டும். ஆரிய ராமர்களை வீழ்த்து முன்னால் "நம்முடைய" விபீஷணர்களை வீழ்த்தித்தான் ஆகவேண்டும். வீழ்த்துவதற்குத் தானே நாங்கள் இருக்கிறோம், ஆணை மட்டும் தந்து விடுங்கள், போராட்டம் தொடங்கிவிடுகிறோம்"—வீரர்களின் துடிதுடிப்பு.

"மறவர்களே இருங்கள், மாவீரர்களே இருங்கள், தீரர்களே கொஞ்சம் இருங்கள், தீவிர எண்ணமுடைய என்னருமைத் தோழர்களே சற்றே இருங்கள். அவர்கள் திருந்திவிடுவார்கள்"—தலைவரின் கருத்துரை.

படைத் தலைவர் பெரியாருக்கும் சேனை வீரர்களுக்குமிடையே இந்த உரையாடல் பல மாதங்களாகவே தொடர்ந்து நடந்துவந்தது. பெரியார் அவர்களும் நம்மவர்களுடனா போராட்டம் என்று வாதாடி வாதாடி, கொந்தளிக்கும் தன் உள்ளத்தையும் கொதிப்பேறிக் கிடந்த தன் வீரர்களையும் சமாதானப்படுத்தி வந்தார்.

ஆனால், சென்ற திங்கள், அன்பர் அவினாசியார், வலிய அழைத்துவந்துள்ள கட்டாய இந்தித் திட்டம் பொறுமை எனும் குன்றேறி நின்ற குணக் குன்று பெரியார் இராமசாமியையும் பொறுமையை இழக்கச் செய்துவிட்டது, போர் தொடங்கச் செய்து விட்டது.

பெரியார் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்தார். ஆனால் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? அந்த எல்லைக் கோட்டையும் தாண்டிச் சென்று, அவினாசியார், தமிழர் தன்மானத்திற்கே ஊறு விளைக்கத் தொடங்கினால் எவர்தான் அதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

உயிருக்கு ஆபத்து என்றால் பொறுத்துக் கொள்ளலாம், நம் உடமைக்கு ஆபத்து என்றால் விட்டுக் கொடுக்கலாம், நம் வாழ்க்கை இன்பத்திற்குக் கேடு சூழப்படுகிறது என்றாலும் சும்மா இருக்கலாம், ஆனால் நம்மை ஊட்டி வளர்த்த தாய் மொழிக்கு ஆபத்து என்றால் நாம் எப்படி வாளா இருக்கமுடியும்,

(8-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

7—8—48 சனிக்கிழமை


## அன்பழைப்பு!

அஞ்சாத நெஞ்சு படைத்த ஆற்றல் மறவர்களே, திரண்டு வாருங்கள், நீங்கள் அடங்காத ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அறப்போர் ஆரம்பமாகி விட்டது.

தடைக் கற்கள் உண்டென்றாலும் தடம் தோள் உண்டு என ஆர்ப்பரிக்கும் மாவீரர் களே ஓடி வாருங்கள், **திராவிடர் கழகம்** போர்க் கொடி உயர்த்தியாகிவிட்டது.

கொதிக்கும் இரத்தமும் குமுறிக் கொந் தளிக்கும் உள்ளமும் படைத்த திராவிடத் தீரரே அணிவகுத்து வாருங்கள், அருமைத் **தலைவர் பெரியார்** போர் முரசு கொட்டியாகி விட்டது!

எங்கள் தமிழுக்கா ஆபத்துத் தேடினர் பகைவர் என வெகுண்டெழுந்து கேட்கும் வீர இளைஞர்களே வரிசை வரிசையாக வந்து சேருங்கள் களத்திற்கு, நம் **தளபதி அண்ணாத்துரை** "வீரர்காள் — வருக வருக" என அன்பழைப்பைத் தந்தாகிவிட்டது!

உயிரைக் கொடுத்தேனும் உயர் தமி ழைக் காப்போம் என உரிமை முழக்கம் புரிந்திடும் உத்தமர்களே சேர்ந்துவாருங் கள், அதோ போர்ப் பரணி கேட்கிறது, போர்வாளும் மின்னுகிறது!

கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தின் முன் தோன்றி வளர்ந்துவரும் திராவிடர் பண்பாட்டிற்கா பழுது தேட முன் வந்தார் கள் இந்த ஆட்சியினர் என அலறித் துடி துடிக்கும் தூய உள்ளத்தவரே விரைந்து வாருங்கள், தூய்மைசேர் தமிழ்ப் போராட் டம் தொடங்கியாகி விட்டது!

இனிய தமிழ் இருக்க இந்திச் சனியன் ஏதுக்கு என அதை வெறுத்துத் தள்ளும் வீறுபடைத்த மாணவ மணிகளே மடமட வென நடந்து வாருங்கள், மாண்புடைய தமிழர் கலாசாரத்தைக் காத்துத் தீர வேண்டிய பேறு உங்கட்குக் கிடைத்து விட்டது!

புறநானூற்றைக் கையிலேந்திய புலவர் பெருமக்களே கூட்டம் கூட்டமாகக் குதித் தோடி வாருங்கள், கோணல் உள்ளம் படைத்தவர்களால், கொற்றவர்கள் போற்றி வளர்த்த தமிழுக்கு ஆபத்து அதிவேகத்தில் வந்து சேர்ந்துவிட்டது!

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உல விப் பொன்னார் இழையும் துகிலும் பூண்டு கனிமொழி பேசி இல்லறம் நாடும் காதல் மாதர்காள், கடிய வாருங்கள்; கன்னித் தமிழைக் காக்கும் பொறுப்பை உங்கட் குத் தந்திருக்கிறார்கள் ஆளவந்தார்கள்!

சிறைக்கஞ்சாத செந்தமிழ்ச் சிங்க ஏறு களே குடும்ப வாழ்க்கை எனும் குகையை விட்டு வெளியே வாருங்கள், வெளியே வந் தீர்கள் என்று தெரிந்தாலே போதும் விபரீத இந்தி மொழி வந்த வழி பார்த்த வண்ணம், சொல்லாமல் திரும்பிவிடும்.

புத்துலகப் பாதையில் தமிழகத்தைச் செலுத்திய சுயமரியாதைச் சூறாவளிப் படையினரே சேர்ந்து வாருங்கள்; போரா டிப் போராடிப் பண்பட்ட உங்கள் தலை மையைத் தமிழகம் வேண்டிநிற்கிறது!

சிறைச்சாலையும் சிறுமைத் தடியடியும் மட்டுமல்ல துப்பாக்கி குண்டுகளும் தூக்கு மேடையும்கூட உங்களைக் கூவி அழைக்கக் கூடும், அத்தனைக்கும் 'தயார்' கூறிவிட்டு, தமிழர்களே, படைவரிசையில் வந்து நில் லுங்கள், ஒழிக இந்தி என முழங்குங்கள்.

தாளமுத்துகளே வாருங்கள், நடராசர் களே வாருங்கள், திருப்பூர் குமரன்களே வாருங்கள், வ. உ. சிதம்பரனார்களே வாருங்கள், வேலாயுதங்களே வாருங்கள், வீரத் தமிழர்களே வாருங்கள், புலி வில் கயல் கொடி மூன்றினால் தமிழ் வானம் எங்கும் எழில் மேவிடச் செய்த மூவேந் தர் பரம்பரையினரே வாருங்கள், செந் தமிழர் திறம் காட்டிய சேரன் செங்குட் டுவனை நினைவிலே கொண்டு வாருங்கள், கனகவிசயர் பரம்பரைக்கு மீண்டும் "அந்தச் சிலப்பதிகாரத்"தை நினைப் பூட்ட வாருங்கள், புத்தம் புதிய புறநானூறு தீட்ட வாருங்கள், இந்திக்குத் தமிழ் நாட் டில் ஆதிக்கமாம், நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே, செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும் இந்தத் தேகம் இருந் தொரு லாபமுண்டோ?

——

# அறப்போர் தொடுக்கிறோம்!

**ஆகஸ்டு 10 செவ்வாய்க்கிழமை காலை, திராவிடப் பெருங் குடி மக்களாகிய நாம்,**

சர்வகட்சித் தமிழர்களின் ஒன்றுபட்ட எண்ணத்திற்கு மாறாகத் தமிழகத்தில் திணிக்கப்படும் கட்டாய இந்தித் திட்டத்தைத் தவிடுபொடியாக்குவதற்காகப் போர் தொடுக்கிறோம்.

பலப்பல நூற்றாண்டுகளாகவே தமிழர்தம் சீர்கேட்டிற்கு அடிப்படைக் காரணமாக இருந்து வரும் வடமொழியைத் தமிழ்ச் சேய்களின் கல்வியில் நுழைக்கும் அறக்கொடுஞ் செயலை எதிர்த்து ஒழிப்பதற்காகப் போர் தொடுக்கிறோம்.

பால்மணமும் மாறாத பச்சைப் பசுங் கிள்ளைகளின் உள்ளத்தில் மூன்று மொழிகளைக் கட்டாய பாடமாகச் சுமத்தும் மாபெருந் தீமையை மாற்றுவதற்காகப் போர் தொடுக்கிறோம்.

தொன்மை சேர் தமிழ் மொழியைச் சிறை வைக்குஞ் செயல் போல அதனைச் சுற்றி எழுப்பப்படும் வடநாட்டு முள்வேலியை முறித்துத் தள்ளுவதற்காகப் போர் தொடுக்கிறோம்.

பொதுமொழி என்று சொல்லி புதுமொழி ஒன்றைத் தனித் தரணி கோரும் தமிழரிடைப் பரப்புவது கூடாது ஆகாது என்பதை அரசாளும் பெருமக்கட்கு அறிவிப்பதற்காகப் போர் தொடுக்கிறோம்

தனித்தன்மையும் சிறப்பும் படைத்த நமது திராவிடப் பண்பாட்டிற்கு இன்று ஆளவந்தார்களால் நேரிட்டுவிட்ட பேராபத்தைக் களைந்தெறிவதற்காகப் போர் தொடுக்கிறோம்.

வடநாட்டுக் கலாசாரப் படையெடுப்பினின்று தமிழகத்தை, தமிழ் மொழியை, தமிழ்க்கலையை, தமிழ் நாகரிகத்தை மீட்பதற்காகப் போர் தொடுக்கிறோம்.

நமது வருங்கால சந்ததிகள் ஆரிய வெள்ளத்திற்கு இரையாகாமல் இருப்பதற்காக, அவர்கள் அனைவரும் இன்பநறுந் தமிழ்வாழ்வை இழந்து விடாமல் இருப்பதற்காகப் போர் தொடுக்கிறோம்.

தமிழ்மொழி வளர்வதற்காக, தமிழ்க் கலை செழிப்பதற்காக, தமிழர் பண்பாடு தனி ஒளி வீசுவதற்காக, தமிழ்த்திருநாடு தலை நிமிர்ந்து நிற்பதற்காக, தமிழர் வாழ்வு மாசு நீங்கிய மணி எனத் திகழ்வதற்காகப் போர் தொடுக்கிறோம்.

நமது போர் வெற்றிபெற்றே தீரும், அது அறப்போர் ஆதலின்!

## ஹிந்தி!

ஹிந்தி திராவிட நாட்டுக்குத் தேவையில்லாதது!

ஹிந்தி திராவிட மக்களால் வெறுக்கப்படுவது!

ஹிந்தி பொது மொழியாக இருப்பதற்குச் சிறிதும் தகுதியற்றது!

ஹிந்தி (காங்கிரஸ் கணக்குப்படி) இந்தியாவிலுள்ள 16 மாகாணங்களில் காலே மாகாணங்களில் பேசப்படுவது!

ஹிந்தி தாளமுத்து நடராசன் என்னும் இரண்டு தமிழ்க் காளைகளின் குருதி குடித்ததால் ஏற்பட்ட இரத்தக் கறை படிந்தது!

ஹிந்தி 1200 தமிழர்களை வெஞ்சிறைக்குள் தள்ளி வாட்டி வதைத்த ஈவு இரக்கமற்ற மொழி.

ஹிந்தி தமிழர் பண்பாட்டிற்கு எள்ளளவும் ஒவ்வாதது—நேர் முரணானது!

ஹிந்தி இலக்கண இலக்கிய வளம் மருந்துக்கும் இல்லாதது!

ஹிந்தி பொய்ப் புராண ஏடுகளை மட்டுமே தன்னகத்தே கொண்டது

ஹிந்தி மூடநம்பிக்கையின் முதல்தரமான வளர்ப்புப் பிள்ளை!

**இத்தகைய ஹிந்தி ஒப்பற்ற தமிழ்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டிருக்கும் நமக்குத் தேவையில்லை! துளியளவும் தேவையில்லை!**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் என்ன மனிதப் பண்பை மறந்துவிட்ட மாமிசப் பிண்டங்களா வாளா இருக்க? நம்மை ஊட்டி வளர்க்கும் உன்னத மொழிக்கு ஆபத்து நேர்ந்துவிட்டது எனில் அதை ஒழித்துக் கட்டுவதைவிட நமக்கென்ன வேலை வேறு இருக்கிறது? தமிழின் உயர்வினை நிலை நாட்டுவதற்கு இல்லையெனில் இந்தத் தோளிருந்து என்ன பலன்? இந்தத் தமிழ் மார்பிருந்து என்ன பலன்? வீர வாளேந்தும் இந்தக் கரமிருந்துதான் என்ன பலன்? புற முதுகு காட்டாத புனித பரம்பரையிலே வந்தவர் நாம் என்ற பெருமை பேசி என்ன பலன்? சொந்த மொழிக்கு வந்த இடையூற்றை எதிர்த்துப் போராடுவதிலே நமக்கென்ன அச்சம்? நமக்கேது தயக்கம்? நமக்கெதற்கு மயக்கம்? தமிழின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் என்று நாம் உரைத்த சூள் உண்மையானால் இன்று களத்திலே குதித்திட வேண்டாமோ? தமிழ் மொழியை, தமிழர் கலையை, தமிழ் நாட்டின் தன்மானத்தை, தமிழ் இனத்தின் பண்பாட்டை, ஆணவ நெஞ்சுடைய ஆரியத்தை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்துப் போராடி வெற்றிக் கொடி நாட்டிவரும் திராவிட கலாசாரத்தை, அணைகடந்து புரண்டோடி வரும் ஆரிய வெள்ளத்தினின்று காப்பதைவிட வேறு எதற்குத்தான் நாம் பிறந்தோம் இம் மண்ணிலே தமிழரெனும் பெயரைத் தாங்கிக் கொண்டு? வாழ்ந்தால், தமிழ்மொழிக்கு, தமிழர் கலாசாரத்துக்கு, திராவிடநாகரிகத்துக்கு வெற்றிக் கொடி உயர்த்தி விட்டு, வெற்றி முரசு கொட்டிவிட்டு, வெற்றி வெற்றி வெற்றிஎன துந்துபி கீதம் இசைத்துவிட்டு, அந்த வெற்றியின் விளைவான திராவிடக் குடியரசிலே நெஞ்சு நிமிர்ந்து வாழ்வோம், இல்லையேல், தமிழைக்காப்பாற்றும் முயற்சியிலேயே, அந்த முயற்சிக்காகவே, வீர மரணம் அடைவோம். **பெற்றால் வெற்றி—இல்லையேல் மரணம்!** ஆம்! அதுதான் நமது இருதய கீதம். அதனை உரைத்த வண்ணம் நாம் போரிலே குதித்துவிடுவோம். நாம் வென்றால், நாம் வாழ்வோம், நம் சந்ததியினரும் வாழ்வர். இல்லை, நாம் களத்திலே வீழ்ந்தால், பிற்கால சந்ததியினர் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவர், செந்தமிழின் உயர்வினுக்காகச் செத்தார் எம் முன்னோர் என்ற எக்காளம் இட்டவண்ணம்! —ஈ. வெ. ரா. உள்ளம் எண்ணிற்று இதுபோல! எண்ணவே, போர் தொடுத்துவிட்டது! பொறுமையின் சின்னம் போர்க்களத் தலைமையாகி விட்டது! அமைதி அமைதி அமைதி என்று அமைதிப் பாசுரம் இசைத்து வந்த குரல், போர் போர் போர் என்று போர்ப்பரணி பாடத் தொடங்கிவிட்டது. ஆம்! குமுறும் எரிமலை வீறி வெடித்து விட்டது—புயல் கிளம்பி விட்டது—பெரியார், ஆணை தந்துவிட்டார்—போர் தொடங்கிவிட்டது!

அந்த நாளும் வந்திடாதோ என்று எந்த நாளை எண்ணி எண்ணி எண்ணற்ற தமிழ் வீரர்கள் ஏங்கிக் கிடந்தார்களோ, அந்த நாள் வந்துவிட்டது! போர் தொடங்கும் நாள் வந்துவிட்டது! திண்தோள் மறவர் தம் களிப்புக்கும் பெருமைக்கும் எக்காளத்துக்கும் இறும்பூதுக்கும் உரிய நாள் வந்துவிட்டது! அவர்கள் தம் வீரத்துக்கு உரைகல் ஒன்றினை 'இந்தா' எனத் தந்திடும் நாள் வந்துவிட்டது! வீரர்தம் விழியிலே தைரிய ஒளியையும், அன்னார் குரலிலே மகிழ்ச்சியின் அலையையும், அவர்களின் மொழியிலே பரணிப் பாட்டையும், அன்னவர் நடையிலே புதிய முறுக்கையும் அவர்களின் தோற்றத்திலேயே ஓர் புதிய எழுச்சியையும் உண்டுபண்ணும் அந்தப் போராட்ட நாள இதோ வந்துவிட்டது! அவர்கள் வேண்டி "வேண்டி வரங்கிடந்த" நாள்—பலப்பல நாட்களாக இன்னும் வரவில்லையே என அவர்கள் ஏங்கிக் கிடந்த நாள்—புத்தம் புதியதோர் இன்ப உணர்ச்சியை அவர்கள் உள்ளத்திலெல்லாம் சலசலவெனப் பாய்ச்சிவிடும் பண்புடைய இன்பப் புது நாள்—வாழ்விலோர் திருநாள்—போராட்டத் தொடக்க நாள்—பொன்னாள்-**ஆகஸ்டு 10** உண்மையிலேயே வந்துவிட்டது.

**ஆகஸ்டு 10!** ஆம்! அன்று போர்க் கொடி உயர்கிறது; தமிழர்தம் அறப்போர் தொடங்குகிறது, அவினாசியார்களின் அக்கிரமப் போக்கால் தமிழர் சமூகம் நசுங்குண்டு போகாதிருக்க வேண்டுமே என்ற கவலையும் கருத்தும் படைத்த காளைகள் எல்லாம் களம் நோக்கிச் செல்லத் துவங்குகின்றனர்; சென்னையில் இந்து தியாலாஜிகல் அல்லது தொண்டை மண்டலப் பள்ளியின் முன் இந்தி எதிர்ப்பு மறியல்போர் ஆரம்பமாகிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு முதலாவது மொழிப்போர் நடந்து முடிந்தது, அந்தப் போராட்டத்தின் முடிவில் வெற்றி பெற்றது தமிழ்நாடு! வெற்றிமட்டுமா பெற்றது—தமிழ்நாடு தமிழருக்கே என்ற இலட்சிய விளக்கத்தையும் பெற்றது. அந்த இலட்சியக் கோட்டை திராவிடநாடு திராவிடருக்கே என்ற அளவுக்கு ஏராளமான அகழ்களும் அரண்களும் படை முகாம்களும் கொத்தளங்களும் பெற்று வளர்ந்திருக்கிறது இந்நாள். இத்தகு நிலையிலே, ஆகஸ்டு 10-ல், நாம் போர் தொடுக்கிறோம் அந்தக் கோட்டையின் மதிற்புறத்திலே இருந்து கொண்டு. ஆகஸ்டு 10-ல் தொடங்கும் போர் இரண்டாவது மொழிப்போர் என்பது மட்டுமல்ல, முதலாவதும் முடிவானதுமான திராவிட கலாசாரப் போராட்டமும் கூட. இந்தப் போராட்டத்தின் வெற்றி அல்லது தோல்வியிலேதான் எதிர்காலத் திராவிடத்தின் வெற்றி அல்லது தோல்வி இரண்டறக் கலந்து நிற்கிறது. அதுமட்டுமல்ல. ஆரிய ஆட்சி இந்த திராவிட நாட்டிலே இனியும் இருக்க முடியுமா, இல்லை இந்த ஆகஸ்டு பத்தோடு மாண்டு மறைய வேண்டியதுதானா என்பதையும் இந்தப் போராட்டந்தான் முடிவு கட்ட இருக்கிறது. ஆகவே ஆரியம் தன் ஆற்றலுக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்ட அத்தனை போர் முறைகளையும் கையாண்டு, தன் பாசறையில் குவிக்கப்பட்டிருக்கும் எல்லா விதமான போர்க் கருவிகளையும் பயன் படுத்தி, முழு மூச்சுடன் போராடி, திராவிட சமுதாயத்தை அடியோடு நசுக்கித் தீர்த்துவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பது என்ற திட்டமான முடிவுக்கு வந்திருக்கும் என்பது மிக மிக உறுதி. ஆரியம் திராவிடம் என்னும் இரண்டு சக்திகளின் பலப் பரீட்சை இந்தப் போர். ஆகவே இது மிக மிகக் கடுமையானதானதாகவும், இரண்டில் ஒன்று என்ற முடிவுக்கு இரு சாராரும் வந்து தீரவேண்டியதாகவும் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. போராட்டத்தின் கடுமையைக்குறித்து பெரியார் அடிக்கடி வற்புறுத்திவலியுறுத்திக்கூறிவருவதுஇந்தக்காரணத்தாலேயேதான்.

போர் தொடங்கிவிட்டோம்! ஆகஸ்டு 10 என்று மறியல் நாள் குறித்துவிட்டோம்! போர் வெற்றியி

லேயே முடியுமா அல்லது வேறு விதமாக நேருமா—அது நமக்குத் தெரியாது. தெரியவேண்டிய தேவையுமில்லை. நமது போர் நியாயமானது; நியாயமான இலட்சியங்களைக் காப்பாற்றுவதற்காக நடத்தப்படுவது; மிக மிக அவசியமானது; உடனடியாக நடத்தித் தீரப்படவேண்டியது—இது நமக்குத் தெரியும். இது போதும் போர் தொடங்க! ஒரு இலட்சியத்தின் நியாய பலம் எவ்வளவு என்பதைக் கண்டறிந்து போராட்டத்தில் இறங்கவேண்டியதுதான் ஒரு இலட்சிய வாதியின் கடமையாக இருக்கவேண்டுமே தவிர இலட்சியம் வெற்றி பெறுமா இல்லையா என்பதுபற்றி அவன் சிந்திக்கத் தேவையில்லை. சிந்திப்பது குற்றம் கூட. இலட்சியம் நியாயமானது என்று தெரிந்துவிட்டால் எப்பாடு பட்டேனும் இலட்சியத்தை வெற்றி புரிக்கு இழுத்துச் செல்வதுதான் உண்மை வீரனின் பொறுப்பே தவிர வெற்றி தோல்வியைப் பற்றிய "மனக்கணக்கு" போட்டுக்கொண் டிருப்பதல்ல! ஆம், அவன் போடவேண்டியது மனக் கணக்கல்ல, புதுக் கணக்கு! ஆகவேதான் **பெரியார்** கேட்கிறார், "**இப்போது நமக்கு ஆள் இருக்கிறது, பணம் இருக்கிறது, போராட்டம் தொடங்கியே தீரவேண்டும் என்பதற்கான காரண காரியம். அவசியம், கடமை இருக்கிறது, உயிரைப்பற்றிக் கவலை இல்லாத உரம் இருக்கிறது, திராவிட மக்களின் கண்ணும் காதும் கருத்தும் போராட்டத்தின் பக்கம், துடிதுடிப்போடு ரத்தக் கொதிப்போடு திரிந்து, இந்தா இந்தா என்று தங்கள் ஆதரவை நீட்டிக்கொண்டு இருக்கிறது—வேறு ஒன்றும் இல்லை—ஆனால் வேறு என்ன வேண்டும்?**" என்று!

★

வேற்படைத் தலைவரே! நாற்படையாளரே!
கேட்பீர் ஒருசொல்! கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம்! நுமது பாக்கியமே
பாக்கியம்! ஆ! ஆ! யார்க்கிது வாய்க்கும்?
யாக்கையின் அரும் பயன் வாய்த்ததிங்கு உமக்கே!
இன்றுநீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும்
நின்றுயுகம் பலவும் நிகழ்த்துமே "இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்
தீண்டன்மின் திருந்தலீர் அவர்தம் செருக்கு!
சுதந்தரம் அவர்க்கு உயிர்! சுவாசம் மற்று அன்று!
நினையுமின் நன்றாய், கனவிலும் இதனை."—
என முரசறையுமே எத் திசையார்க்கும்!
இத்தனிப்போரில் நீர் ஏற்றிடும் காயம்
சித்தம் களித்து ஜெயமாது உமக்கு
முத்தமிட்டு அளித்த முத்திரையாகி
எத்தனை தலைமுறைக்கு இலக்காய் நிற்கும்!
போர்க்குறிக் காயமே புகழின் காயம்;
யார்க்கது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!
அநந்தம் தலைமுறை வரும்தனி மக்கள்
தினந்தினம் தாம் அநுபவிக்கும் சுதந்தரம்
தந்த, தம் முன்னோர் நொந்த புண் எண்ணி
சிந்தை அன்புருகி, சிந்துவர் கண்ணீர்!
என்றால், அப் புண், இறந்தும் கொளத்தக்கது
அன்றோ அறைவீர்...............................
.......................................................எவரே
புண்படாது உலகிற் புகழ் உடம்பு அடைந்தார்?
புகழுடம்பு அன்றி இவ் இகழுடம்போ மெய்?
கணம் கணம் தோன்றி, கணம் கணம் மறையும்
பிணம் பல! இவரெலாம் பிறந்தார் என்பவோ?
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்!

★

பாண்டிய மன்னன் **ஜீவக வழுதி**, தன் நாட்டின் மீது படையெடுத்திருக்கும் மாற்றார் படையுடன் போர் புரியச் செல்லும் படைவீரர்களை நோக்கி ஆற்றிய போர்க்களப் பேருரை இது! மனோன்மணீயம் எனும் அழகிய இலக்கியத்தில் காணப்படுகிறது இவ் உயிரோவியம்.

ஜீவகன் தன் படை வீரர்களைப் போர்க்களம் போமின் எனச் செலுத்தியபோன்று, வீரர்காள், வெற்றி நிச்சயம் நமக்குத்தான் என்பதை வலியுறுத்திக் கூறினானில்லை, தன் தோள் வலியையும் மாற்றார் வலியையும் ஒப்பிட்டுக் காட்டி அதனினும் இதுபெரிது ஆதலின் அஞ்சாதீர் என்று உரைத்தானில்லை, எப்பக்கம் வந்து புகுந்துவிடும் மாற்றார் கூட்டம் அது எத்தனை பட்டாளம் கூட்டிவரும் என்று 'பொக்கம்' பேசினானில்லை, பகைவர் வன்மையைக் குறைத்தோ தன் திறமையை மிகுத்தோ கூறினானில்லை, போராட்டத்தின் முடிவு என்ன என்பதுபற்றி அவன் அதிகம் உரையாடினானில்லை! அவன் தன் வீரர்களை நோக்கிக் கூறியதெல்லாம், "இத் தனிப்போரில் நீர் ஏற்றிடும் காயம் சித்தம் களித்து ஜெயமாது உமக்கு முத்தமிட்டு அளித்த முத்திரையாகி எத்தனை தலைமுறைக்கு" வீர உணர்ச்சியை ஊட்டிடும் பாரீர் என்பதைத்தான். அவன், அணிவகுத்து நின்ற தன் படை வரிசைகளைப் பார்த்துச் சொன்னதெல்லாம், "இன்று நீர் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர் என்பதை எட்டுத் திசை எங்கும் எந்தெந்த யுகத்திலும் முரசறைந்து காட்டுமே" என்பதைத்தான். அவன் பன்னிப் பன்னி உரைத்ததெல்லாம் "தலைமுறை தலைமுறையாக இனி வரும் தமிழ் மக்கள், தினந்தினம் தாம் நுகர்ந்திடும் உரிமை எனும் உயர் பொருளைத் தமக்களிப்பதற்காக, தம்முன்னோர், தம் மார்பகத்தே ஏந்திய புண்ணினை எண்ணி எண்ணி சிந்தை அன்புருகி சிந்துவர் கண்ணீர் என்றால் அப் புண் இறந்தும் கொள்ளத் தக்கது அல்லவோ" என்பதைத்தான்.

போர்க் குறிக் காயமே புகழின் காயம் என்பதைத்தான், அந்த வடுவினை ஏந்திய வீரர்களை என்றென்றைக்கும் எதிர்காலம் ஏத்தி ஏத்தித் தொழும் என்பதைத்தான், களத்திலே மறைந்தாலும் கவலையில்லை —பூத உடல்தான் மறையுமே தவிர புகழுடல் என்றென்றும் மறையாது என்ற மகத்தான உண்மையைத்தான் ஜீவகன் எடுத்துக்கூறினான், அதுதான் உண்மை வீரனின் இயல்பு, உண்மை வீரன்தானே ஜீவகன், ஆகவேதான் இத்தகு வார்த்தைகளை வீசினான் போர்க்களம் புகுந்திடும் தன் படை வீரர்களை நோக்கி!

"போராட்டத்தைத் துவக்குவோம். மானமுள்ள மக்களாகப் போராடுவோம். மானத்தோடு போராடி, மடிந்தாலும் தவறில்லை. பின் சந்ததியார் மேலும் வீரத்தோடு போராடி, நாம் விட்டுச் செல்லும் பணியைப் பூர்த்திக்குக் கொண்டுவருவார்கள். திராவிடர்கள் மானத்திற்கும் வீரத்திற்கும் பேர் போனவர்கள். ஆகவே குண்டுபட்டு இறந்தீர்கள் என்றாலும் குண்டு மார்பில் பாய்ந்திருக்கட்டும். முதுகில் பாயும்படி நடந்துகொள்ளாதீர்கள். என்றாகிலும் ஒருநாள் சாகப் போகிறவர்கள்தான் நாம். ஆகவே நல்ல காரியத்திற்காக நம் உயிரை நல்ல முறையில் அர்ப்பணித்துச் சாவோம்."

**ஜீவக வழுதியின் கவிதைப் பேருரையின் வசனநடை அல்ல இது! பெரியார், மொழிப்போரில் ஈடு**


படும் மாவீரர்கட்குத் தந்துள்ள மணிமொழிகள் இவை. மன்னன் ஜீவகனைப் போலவேதான் தலைவர் பெரியாரும் முடிவு என்ன என்பதைப்பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. போரிலே புறமுதுகு காட்டாத பெருவீரம் தேவை என்பதைத்தான் வற்புறுத்திக் கூறுகிறார்.

ஆகஸ்டு 10 ல் தொடங்கும் போராட்டத்தின் முதல் தளபதி **தளபதி அண்ணாதுரை** அவர்களே தான் என்று தலைவர் அறிவித்து விட்டார். இது மிக மிக மகிழ்ச்சிக் குரிய சேதி. எங்கள் தளபதி எங்கள் தளபதி என்று எண்ணற்ற இளந்தமிழர் ஏற்றிப் போற்றும் இளைஞர் ஏறு அண்ணா அவர்களைத் தவிர வேறு எவர் படைத் தலைமையை ஏற்று, நம் தலைவர் பக்கம் நின்று, போராட்டத்தைத் திறம்பட நடத்த முடியும்? காந்தியாருக்கு ஒரு ஜவஹர் கிடைத்ததைப் போல, வீரன் லெனிக்கு ஒரு ஸ்டாலின் கிடைத்ததைப் போல, கெமால் பாட்சாவிற்குப் பிறகு ஒரு இனேனு தோன்றியதைப் போல தலைவர் பெரியார் பெற்ற அவர்தம் அருமைத் தளபதி அல்லவா அண்ணா அவர்கள்? ஆயிரமாயிரம் இளைஞர்களின் இருதய கீதமல்லவா அண்ணா என்ற சொல்? அவர் பேசுகிறார் என்றாலே ஆரிய வட்டாரத்தில் அவதிக் குரல் எழுவதும், அவர் எழுத்துக்கள் கூரிய ஈட்டியெனத் தம்மைத் தாக்கக் கண்டு அதிகார வர்க்கம் அஞ்சி நடுங்குவதும், அந்த எழுத்திலேயும் பேச்சிலேயும் உள்ள அந்த ஏதோ ஒருவித—நேரிலே கண்டு அனுபவிக்க முடியுமே தவிர வார்த்தையால் விவரித்துக் கூறமுடியாத—இன்பத்தைக் கண்டு மக்கள் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைப்பதும் இன்பத் திராவிடத்தின் நித்திய நிகழ்ச்சிகள் அல்லவா? தமிழ் நாட்டு பெர்னாட்ஷா என அறிஞர் உலகு போற்றிப் புகழ்ந்திடும் அந்த அறிஞர்க்கு அறிஞர், தளபதிக்குத் தளபதியாய் இன்று படைத்தலைமை தாங்கி, தமிழர் பட்டாளத்தை நடத்திடக் கண்டு, அந்த பெர்னாட்ஷாவுக்கு நம் சாக்ரடீஸ், ஆசி கூறி, "தளபதியே! களம் சென்று வருக" என வாழ்த்துக் கூறி, தன் வெண்தாடியை அசைத்த வண்ணம், முகத்திலே புன்முறுவல் பூத்த வண்ணம், அன்புடன், களிப்புடன், வழி அனுப்பும் காட்சி கண்டு தமிழர்தம் நெஞ்சந்தோறும் ஏதோ ஒருவித புது இன்பம் தவழ்ந்து தவழ்ந்து விளையாடுவதை எவரே அறியார்?

இன்று தேதி ஏழு! ஆகஸ்டு 10-ல் போர் தொடங்குகிறது—தளபதி அண்ணா அவர்கள் தலைமையில், தலைவர் பெரியாரின் வழிகாட்டுதலுடன்! இடையிலே இருப்பன இரண்டே நாட்கள்! இரண்டு நாட்களும் இரண்டு விநாடிகளாய்ப் பறந்துவிடும். பிறகு ஆகஸ்டு 10, செவ்வாய்க் கிழமை, பிறந்துவிடும். போர் தொடங்கிவிடும். அதற்கு இடையிலே கூட, எந்த விநாடியிலும் எதுவும், நிகழக்கூடும். வீரர்களே, வீராங்கனைகளே எதற்கும் தயாராயிருங்கள். பிறகு, "இப்படி நேரும் என்று தெரியாது போயிற்றே" என்று கைகளைச் 'சொடக்கிக்' கொள்ளாதீர்கள்.

வாழிய செந்தமிழ்! வீழ்க ஹிந்தி!
ஒழிக ஆரியம்! வெற்றி நமதே!

# சென்னையில் நேரு! — 2




நேற்றுப் பிறந்த ஹிந்தி, எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய செந்தமிழுக்குத் தங்கையாம்! சொல்கிறார் பண்டித நேரு! எப்படியிருக்கிறது வேடிக்கை!


## மணமகள் தேவை

மாதம் ரூ. 80 வருவாயும் புரட்சி மனப்பான்மையுமுடைய 40 வயதுள்ளவருக்கு 25 வயதுக்கு மேல் 30 வயதுக்குட்பட்ட பெண் தேவை. பெண் எந்த ஜாதியிலும் இருக்கலாம். விதவையாகவும் இருக்கலாம்.

கதிர்வேலு C/o
போர்வாள், பவழக்காரத் தெரு
சென்னை.


## சந்தாதாரர்கட்கு!

போர்வாளுக்கு அடுத்த வாரத்தோடு ஓர் ஆண்டு முடிகிறது. ஆதலின் போர்வாள் துவக்கிய போது ஓர் ஆண்டுச் சந்தா கட்டியவர்கள் அனைவரும் மறுபடியும் சந்தா அனுப்பி தங்கள் மேலான ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறோம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
கட்டைகளையெல்லாம் வேண்டி வரவேற்பதும்தான் சென்னை அரசியலாரின் பல்வேறு செயல்களினூடே பரவிக் கிடக்கும் ஒரே ஒரு ஒற்றுமைச் சரடு!

நன்மையே போ! தீமையே வா! ஜனநாயகமே போ! எதேச்சாதிகாரமே வா! விடுதலை உணர்ச்சியே போ!—பரம்பரை அடிமைப் புத்தியே வா!—இதுதான் சென்னை சர்க்காரின் தாரக மந்திரம்.

**மனுஸ்மிருதி**—இதை இன்றுவரை தடுக்கவில்லை சென்னை சர்க்கார்.

ஆனால் **இராவண காவியம்!**—இதைத் தடுத்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது!

மனுஸ்மிருதி ஒரு விஷவிருட்சம்—ஆகவே அதைத் தடை செய்யவில்லை சர்க்கார்.

இராவண காவியம் நெஞ்சை அள்ளும் ஓர் சிலப்பதிகாரம்!—ஆகவேதான் அதைத் தடுத்து விட்டனர் நம் ஆளவந்தார்கள்.

இதென்ன விபரீத செயலாயிருக்கிறதே என்று கேட்கத் தோன்றும் உங்கட்கு, உண்மையிலேயே இச் செயல் விபரீதமானதாகத் தான் தோன்றும் உங்களுக்கு, ஏனெனில் நீங்கள் நன்மையை வரவேற்று தீமையை ஒழித்துக்கட்டுவதில் நம்பிக்கை உடையவர்கள். ஆனால் சென்னை சர்க்கார் அப்படிப்பட்டவர்கள் அல்லவே, **நன்மையே போ! தீமையே வா!** அதுதானே அவர்களின் தாரக மந்திரம். ஆகவே தான் இராவண காவியத்துக்கு 144 தந்துவிட்டு மனுஸ்மிருதிக்கு என்றும் சிரஞ்சீவியாய் இரு என்று வாழ்த்துக் கூறிவிட்டனர்!

மனுஸ்மிருதியிலே வகுப்புத் துவேஷத்திற்கான வித்துகள் ஏராளம். "சூத்திரன் வேதம் ஓதினால் அவன் நாவை அறுத்தெறி!" "சூத்திரன் வேதம் ஓதுவதைக் கேட்டால் அவன் காதில் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை ஊற்று!" "சூத்திரன் பிராமணர் முதலான மேல் சாதிக்காரர்கட்கு உழைக்கவே பிறந்தவன்!" "சூத்திரனுடைய பொருள்கள் அத்தனையும் பிராமணர்களுக்கே சொந்தம். ஆகவே ஒரு சூத்திரனைக் கேட்காமலேயே கூட 'அவனுடைய சொத்துகளை பிராமணர் எடுத்துக் கொண்டால் அது குற்றமாகாது." "சூத்திரன் ஒரு பிராமணனைத் திட்டினால் அவன் நாவைத் துண்டிக்க வேண்டும். ஆனால் ஒரு பிராமணன் ஒரு சூத்திரனைக் கொன்றுவிட்டால்கூட அவனை வெளியூருக்கு அனுப்பிவிடலாமே தவிர வேறு தண்டனை தரக்கூடாது"—இவை மனுதர்ம சாத்திரத்திலே காணப்படுகின்ற மகத்தான (அ) நீதிகள்! இந்த நூல் நாட்டிலே நடமாடலாம், குற்றமில்லை, ஆனால் இராவண காவியம் என்னும் செந்தமிழ் இலக்கியம், கம்பன் காதைக்கு எழுந்த மறுப்பு நூல். முழுதும் பழுதற்ற முத்தமிழ்க் காவியம் எனத் தகும் தன்மையது. அதுமட்டும் நாட்டில் நடமாடக் கூடாதாம், நடமாடினால் வகுப்புத் துவேஷம் நாட்டில் பரவிவிடுமாம்! சொல்லுகிறார்கள் சென்னை சர்க்கார், என்ன நெஞ்சுத் துணிச்சல்!

சென்ற ஆண்டு, சீர்திருத்த எண்ணங்களை நாட்டிலே தவழ விடுவதற்காக நடத்தப்பட்டுவந்த சிறந்த பகுத்தறிவு நாடகமாகிய போர்வாளுக்குத் தடைவிதித்தார்கள் அருவருக்கத் தக்க காட்சியே ஏதுமற்ற அதில் அருவருப்பு மிக உண்டென்று பொய் கூறி! ஆனால் அருவருப்புத் தவிர வேறு ஏதும் அற்ற "சந்திரலேகா" ஜாம் ஜாமென தமிழகத்தில் திக் விஜயம் செய்கிறது (ஜெமினியின் தமிழ் நடை!)—சென்னை சர்க்கார் கண்மூடி மௌனியாக நிற்கின்றது, அதைத் தடுக்காமல்! அந்த ஆபாச நிழற்படத்தைக் கண்டும் காணாததுபோல "மோன நித்திரை" செய்கிறது, சர்க்கார்! ஏன் என்று கேட்கிறீர்கள்? அதுதான், **நன்மையே போ தீமையே வா** என்ற அவர்களுடைய தாரக மந்திரம் அவர்களுக்குக் காட்டும் வழி!

மதுவிலக்கை மேலும் எட்டு ஜில்லாக்களில் இந்த ஆண்டு நுழைத்திருக்கவேண்டும், நுழைத்தால் மாகாணம் முழுவதும் மதுவிலக்குத் திட்டம் அமுலுக்கு வந்துவிடும், ஆனால் அப்படிச் செய்யப் போவதில்லையாம் நம் ஆளவந்தார்கள், ஏனெனில் மதுவிலக்குச் செய்வதால் அதன் மூலம் வரும் வருவாய் நின்றுவிடுகிறதாம், கையிலோ பணம் இல்லையாம், மேலும் மதுவிலக்குச் செய்தால் பண கஷ்டம் தாங்க முடியாத அளவுக்கு ஏறிவிடுமாம், எனவே மதுவிலக்குத் திட்டத்தின் வளர்ச்சி இந்த ஆண்டு கிடையாதாம்!

மதுவிலக்குக்குப் பணம் இல்லை! ஆனால் மக்கள் மன்றத்தில் ஒருமனதாக வெறுத்து ஒதுக்கப்படும் கட்டாய இந்தி திட்டத்தை நுழைப்பதற்கு 20 லட்சம் ரூபாய் கொட்டிக் கொடுக்கப்படுகிறது! அதற்கு மட்டும் பணம் இருக்கிறது! எப்படி வந்தது பணம் இதற்குமட்டும்? **நன்மையே போ தீமையே வா** அந்தத் தாரக மந்திரம்தான் காரணம் இந்த விபரீதப் போக்குக்கும்!

இந்த வாரம் **இரணியன் அல்லது இணையற்ற வீரன்** என்னும் புரட்சிக் கவிஞரின் நாடகத்துக்குத் தடை விதித்திருக்கிறார்கள் சென்னை சர்க்கார். சென்னை மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் இனி நடிக்கக் கூடாதாம் அந்த நாடகத்தை! பகுத்தறிவு நாட்டில் பரவிவிட்டால் என் செய்வது என்ற பயம்போலிருக்கிறது சென்னை சர்க்காருக்கு!

இரணியன் நாடகம் ஆரிய சூழ்ச்சியை அழகுற விளக்கும் ஓர் அரிய


## தமிழன் தொடுத்த போர்!

மா. இளஞ்செழியன்
B. A. (Hons)
தீட்டியது!

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எழில் மிகு சித்திரம் இந் நூல். மறுபடியும் போர்முரசு கொட்டப்படும் இந் நாளில் தமிழர் ஒவ்வொருவரும் இதனைப் படித்துணரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை.

240 பக்கங்கள் விலை 1 12 0 தபாலில் 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

முயற்சி; கவியரசர் பாரதிதாசனின் கைவண்ணம்! சென்ற 14 ஆண்டுகளாக தமிழகத்தின் பல பகுதிகளிலும் நடிக்கப்பட்டு வருவது அந்த நாடகம்.

1934ல் முதல் முதல் சென்னை வி. பி. ஹாலில் பெரியார் அவர்கள் தலைமையில் அந்த நாடகம் நடிக்கப்பட்டது. அன்றுமுதல் சென்ற வாரம் வரை அதிலே 'ஆபாசம்' இருப்பதாக யாருமே கூறியதில்லை. இந்த ஓமந்தூரார் சர்க்கார் கூட இந்த இரண்டாண்டுகளாக 'இரணியனி'ல் இழுக்கான பகுதிகள் இருப்பதாகக் கண்டறிந்து கூறிற்றில்லை. இப்போது தான் கூறுகிறது இந்தப் பூணாரம் பூண்ட புதுமையினை! இரணியன் நாடகத்தில் இழுக்கு இருப்பது உண்மையானால் இரண்டாண்டுகளாக ஏன் இந்த சர்க்கார் இந்த நடவடிக்கை எடுக்கவில்லை? ஒன்று, இவர்களுக்கு, இந்நாடகத்தில் இழுக்கு இருப்பது தெரியாமல் இருந்திருக்கவேண்டும். அல்லது இழுக்கு இருப்பது தெரிந்தும் எக்காரணத்தாலோ அதைத் தடுக்காதிருந்திருக்கவேண்டும். 'இழுக்கு' இருப்பதே தெரியாதிருந்தது என்றால் இவர்கள் நிர்வாகத் திறமை அற்றவர்கள் என்று பொருள். இழுக்கு இருப்பது தெரிந்தும் இவர்கள் வாளாகிடந்தனர் என்றால் ஒன்று, இந்த இழுக்கைத் தடுக்க நடவடிக்கை தேவையில்லை என்று அவர்கள் கருதி இருக்க வேண்டும், அல்லது இவர்கள், அதாவது சர்க்கார் நிர்வாகம், இந்த இரண்டாண்டுகளாக உறங்கிக் கிடந்திருக்கவேண்டும். முன்னது உண்மையானால், சர்க்கார் கோமாளித்தனமாக நடந்துகொள்கிறது என்றும், பின்னது உண்மையானால் சர்க்காருக்கு ஆளுந்திறமை குறைவு என்றும் பொருள்.

"இதெல்லாம் ஒன்றுமில்லை! இரணியன் நாடகம் ஆரியர் சூழ்ச்சியை அம்பலத்திற்கு இழுக்கிறது! அதுகண்டு ஆரிய வட்டாரத்தில் அவதிக் குரல் எழுகிறது. அந்த அவதி தீர, இந்த நாடகத்திற்குத் தடை விதித்தே தீரவேண்டும் என்று மைலாப்பூரும் மாம்பலமும் எங்கட்கு ஆணையிட்டது, அந்த ஆணையை நிறைவேற்றி விட்டோம்" என்று சர்க்கார் சொல்லுமானால், இரணியன் நாடகத்தில் ஆபாசம் இருப்பதற்காக அதனைத் தடை செய்து இருக்கிறோம் என்று கூறியது பொய் என்பதையாவது ஒப்புக்கொள்ளவேண்டும். ஆரிய வட்டாரம் எங்களை அச்சுறுத்தி இந்த உத்திரவை நிறைவேற்றச் செய்திருப்பதாகக் கூறுவது பொய் —இரணியனில் இழுக்குள்ள கட்டங்கள் இருப்பதே மெய் என்று சொல்லத் துணிவதானால் இன்னின்ன பகுதிகளில் இன்னின்ன இழுக்கு உள்ளது என்பதையாவது சர்க்கார் வகைப்படுத்தி உரைத்தாக வேண்டும் 'ஆரிய வட்டாரம் எங்களை அச்சுறுத்தியதுதான் மெய், அதில் இழுக்குகள் உள்ளதாகக் கூறுவதுபொய், என்றாலும், ஆரியம் அச்சுறுத்தியதைக் கூறமாட்டோம்! இல்லாத இழுக்குகளை இருப்பதாகத்தான் கூறுவோம்' என்றால் இந்த வெட்கக் கேட்டை வெளியே சொல்லாமலாவது மூடிவைக்க வேண்டும். அல்லது, "**நன்மையே போ தீமையே வா**" என்பதுதான் எங்களுடைய அரசியல் அரிச்சுவடி; அந்த வாசகத்திற்கு அப்பழுக்கு இல்லாமல் நடந்துகொண்டிருக்கிறோம் இந்த இரணியன் நாடகத் தடை உத்தரவின்மூலம்" என்பதையாவது வாய்விட்டுச்சொல்லிவிடவேண்டும்.

நாம் அறைகூவி அழைக்கிறோம் ஆளவந்தார்களை, மன்றம ஒன்று அமைப்போம், யாரேனும் ஓர் அமைச்சர் வரட்டும், உயர்நிலைப் பள்ளி மாணவன் ஒருவனை நாம் அனுப்புவோம், சொற்போர் நிகழட்டும் இரணியனில் இழுக்கு உண்டா என்பது பற்றி! வருகின்ற அமைச்சர் அந்த மாணவனிடம் தோற்றால் அவர் அமைச்சுப் பதவியை விட்டு விடட்டும்! வேண்டாம், வேண்டாம், இந்தச் சாதாரண சங்கதிக்காக கனம் இலேசாக மாறுவானேன்? சர்க்கார் இரணியன் தடையை நீக்கினால் போதும். மாணவன் அமைச்சரிடம் தோற்றால் அவன் தன் எதிர்காலக் கல்வியையே விட்டு விடத்தயார் வருவார்களா அமைச்சர்கள்? வந்து, தம் செயல் நேர்மையானதுதான் என்பதை நிலைநாட்ட முந்துவார்களா?

அப்படியின்றி, ஏதோ அதிகாரம் இருக்கிறது தம்மிடம், இட்ட ஏவலை நிறைவேற்ற ஏவலர்கள் உண்டு ஏராளமாக, கட்டளையை மீறுவோரை தண்டிக்க சட்டம் இருக்கிறது தயாராக, சட்டம் சரியும் போது அதற்குத் துணை செய்ய சிறைக்கூடம் இருக்கிறது என்ற எண்ணத்தில் சர்க்கார் நடந்துகொள்வதானால், அந்த "நடத்தை" ஜனநாயக சர்க்கார் என்று கூறிக்கொள்ள ஆசைப்படும் ஒரு சர்க்காருக்கு ஏற்றதல்ல என்பதை மட்டும் நாம் ஆளவந்தார்கட்கு அன்புடன் எடுத்துக்கூறி இந்த அளவில் இக்கட்டுரையை இப்போது முடித்துக் கொள்கிறோம்.

---


## தமிழாசிரியர் மாநாடு

★

**14—8—48: சென்னை மெமோரியல் மண்டபம்**

★

தலைவர்: புலவர் S. S. அருணகிரிநாதர்

பெரியார் ஈ. வெ. ரா, திரு. வி. க, ம. பொ. சி, திருச்சி விசுவநாதம் மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchezhiyan B. A. (Hon